துறையின் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-35

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. எஸ்.டேனியல்ராஜ்: ஹவாலா பிரச்சினையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டேனியல் ராஜ், எதுவும் என்னிடம் நீங்கள் கொடுக்கவில்லை. கொடுக்காமல் நீங்கள் எடுத்திருப்பது எப்படி முறையாகும்? ஹவாலா மோசடி பற்றி பேச வேண்டும் என்றால் அங்கே போய்ப் பேசுங்கள். நீங்கள் இங்கே பேச வேண்டும் என்றால் என்னிடம் அனுமதி கோரி என்ன கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மூத்த உறுப்பினரே, கடைசி நாள்-முறைகேடாக நடந்து, "வெளியேற்றுங்கள் சார்" என்று சொல்வதெல்லாம் முறையா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டேனியல்ராஜ் நீங்கள் என்னிடம் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) என்னிடம் அனுமதி கோரி எழுத்துமூலம் என்ன கொடுத்திருக்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதற்கு அறையிலேயே சொல்லியிருக்கிறேனே. அறையிலேயே கேட்டீர்கள், அறையிலேயே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் வேண்டாம். அதை இங்கே எழுப்ப முடியாது. நான் உங்களுக்கு அறையிலேயே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.

20-2-1996 அன்று வேதாரண்யம் கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பிரச்சினை பற்றிப் பேரவையில் எழுப்பி அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். *(குறுக்கீடுகள்)*

(ஆ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அது அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை. நீங்கள் அறையில் வந்து என்னிடத்தில் ஓரலாகக் கேட்டீர்கள். கேட்டதற்கு, அதை எழுப்ப முடியாது என்று சொல்லிவிட்டேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்பினால் அது அவைக் குறிப்பிலே இருக்காது. *(குறுக்கீடு)* நான் அனுமதி மறுத்திருக்கிறேன். விதி எண் 58-ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள் *(குறுக்கீடு)* திரு. டேனியல்ராஜ் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் தடுக்க முடியாது. நான் உங்களைத் தடுக்கவில்லை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. *(குறுக்கீடு)* அதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. *(குறுக்கீடுகள்)* வேதாரண்யம் மீனவர்கள் பிரச்சினையை எடுத்து கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு.எஸ். டேனியல்ராஜ், திரு. மா. சுந்தரதாஸ், திருமதி ஏ.எஸ் பொன்னம்மாள், திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், திருமதி ஜெ. லோகாம்பாள், திரு. பி.வி. இராஜேந்திரன் மற்றும் திரு.ப. ரங்கநாதன் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) நாகப்பட்டினம் கடல் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேதாரண்யம் கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ள பிரச்சினை பற்றிப் பேரவையில் எழுப்பி, பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று திரு. எஸ். டேனியல்ராஜ்,

திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்து இருந்தனர். அதை இன்று எடுத்துக் கொள்வதற்கு நான் ஒப்புதல் அளித்திருக்கிறேன். அதை இப்போது பேரவையில் எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி, என்ன? (குறுக்கீடு) கிளாரிபிகேஷனுக்கு இப்போது ஒன்றும் அவசியமில்லை. கிளாரிபிகேஷன் என்பது பேரவை நடவடிக்கைகள் நடைபெறும்போது அதிலே கிளாரிபிகேஷன் கேட்கலாம். ஆரம்பிக்கும்போதே கிளாரிபிகேஷன் என்று, பூஜ்யத்தில் போய் கிளாரிபிகேஷன் கேட்கிறீர்களே? பூஜ்யத்தின் மீதே உங்களுக்குப் பெரிய நாட்டம் இருக்கிறது என்று தெரிகிறது. உட்காருங்கள் (குறுக்கீடு) ஒழுங்குப் பிரச்சினை அல்லது கிளாரிபிகேஷன் என்பது பேரவை நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கிறபோது, அந்தச் சம்பவங்கள் மீது எழுப்பப்படுவது. ஒன்றுமே இன்னும் ஆரம்பிக்காதபோது, முன்னரேயே கிளாரிபிகேஷனோ, ஒழுங்குப் பிரச்சினையோ வராது. உட்காருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் அவர்கள் வேதாரண்யம் மீனவர்கள் பிரச்சினை பற்றி எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே கொடுத்துள்ள சில பிரச்சினைகள் பற்றி அனுமதி மறுக்கப்பட்டிருக்கலாம். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, என்ன பிரச்சினை? ஈ.பி.யிடம் அதனுடைய விளக்கம் கேட்டிருக்கிறேன். வந்தவுடன் தருகிறேன். (குறுக்கீடு) திரு. பரிதி, இன்னும் உங்களுடைய பதவிக்காலம் எல்லாம் இருக்கிறது. உங்களுக்கு அவையெல்லாம் அனுப்பி வைக்கப்படும். திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

முற்பகல் 11-40

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், நீங்கள் கொடுத்த பிரச்சினை பற்றி இங்கே எழுப்பப்பட்டு அதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். பதில் சொன்ன பிரச்சினையைப் பற்றி மீண்டும் மீண்டும் எழுப்பிக் கொண்டிருக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவரைப் பேசவிடுங்கள் (குறுக்கீடு) திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசட்டும். திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஜி. பழனிசாமி, திரு. வே. தம்புசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது, 3 பேர்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன். பல்வேறு உறுப்பினர்களிடமிருந்து பேரவை விதி 55-ன் கீழ் பல்வேறு அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) 3 பேர்களும் உட்காருங்கள். உங்களுக்குத்தான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வதாக அறிவிக்கிறேன். (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி, பழனிசாமி நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளெல்லாம் அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. துறைகளிடமிருந்து பதில்கள் கிடைத்துள்ளன. கிடைத்தவற்றை இன்று பேரவைக்கு வைத்து இருக்கிறேன். இன்னும் சில பதில்கள் வரவேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பாக நீங்கள் கொடுத்த அந்த அறிவிப்புகூட தற்போது பேரவை விதி 55-க்கு மாற்றப்பட்டு அதுவும் மாண்புமிகு அமைச்சருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதுபற்றிய பதில் விரைவில் உங்களுக்கு சுற்றனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும், உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ், பேசுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).